இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli


நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 214 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 02 – வெள்ளிக்கிழமை 15 மார்ச் 2024 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 214 : Thiruvalluvar Year - 2055 - Panguni 02 - Friday 15 March 2024 - Madurai 8 Pages ₹ 5.00

## 4 சதவிகித அகவிலைப்படி உயர்வு:

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - அரசு அலுவலர் சங்கங்கள் நன்றி!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.3.2024) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 4 சதவீத அகவிலைப்படி உயர்த்தி அறிவித்தமைக்காக தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், தமிழ்நாடு அனைத்து ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் மாநிலமையச் சங்கம், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அனைத்துப் பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் (டியோடர்), தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தொழில்கல்வி ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு வேளாண்மை பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை பணியாளர் கழகம், டாக்டர் ராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழக இடைநிலை மற்றும் பதவி உயர்வு பெற்றபட்டதாரி ஆசிரியர் மன்றம் (தீபம்), தமிழக பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், JSR தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசுத் தேர்வுத்துறை பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆசிரியர் காப்பாளர் சங்கம், தமிழ்நாடு முதுகலை பட்டதாரி தொழிற்கல்வி ஆசிரியர் சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், டாக்டர் இராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் இயக்கம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

## தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து தெரிவித்தனர் !

**சென்னை, மார்ச் 15-**

**அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நான்கு சதவீத அகவிலைப்படி உயர்த்தி அறிவித்ததற்கு பல்வேறு அரசு அலுவலர் சங்கங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 12.3.2024 அன்று அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 46 சதவீதமாக இருந்த அகவிலைப்படியை 1.1.2024 முதல் 50 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தார்.

இந்த அகவிலைப்படி உயர்வால் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுகிறார்கள். அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை நிதி நிலைமைக்கு ஏற்ப படிப்படியாக நிறைவேற்றுவதில் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அகவிலைப்படி உயர்வை அறிவித்ததையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.3.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், தமிழ்நாடு அனைத்து ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் மாநில மையச் சங்கம், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அனைத்துப் பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் (டியோடர்), தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தொழில் கல்வி ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு வேளாண்மை பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம்,

> **“இந்த அகவிலைப்படி உயர்வால் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுகிறார்கள். அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை நிதி நிலைமைக்கு ஏற்ப படிப்படியாக நிறைவேற்றுவதில் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.”**

தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை பணியாளர் கழகம், டாக்டர் ராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழக இடைநிலை மற்றும் பதவி உயர்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர் மன்றம் (தீபம்), தமிழக பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், JSR தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசுத் தேர்வுத்துறை பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆசிரியர் காப்பாளர் சங்கம், தமிழ்நாடு முதுகலை பட்டதாரி தொழிற்கல்வி ஆசிரியர் சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், டாக்டர் இராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் இயக்கம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்த 4 சதவீத அகவிலைப்படி உயர்வால் சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுகிறார்கள். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.2587.91 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத் தொழிலாளர்களின்

# ஊதிய நிலுவைத் தொகையை உடனடியாக விடுவித்திடுவீர்!

### ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் !

**சென்னை, மார்ச் 15-**

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஊரகப் பகுதிகளில் உள்ளூர் மக்களின் பங்களிப்புடன் கிராமங்களை மேம்படுத்தும் திட்டமாகும். இத்திட்டத்தில் பணியாற்றிவரும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தி ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங் அவர்களுக்கு - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.3.2024 அன்று கடிதம் எழுதியுள்ளார்கள்.**

அக்கடிதத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஊரகப் பகுதிகளில் உள்ள பதிவு செய்யப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் முக்கியமான திட்டங்களில் ஒன்றாகும். மேலும், ஊரக மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்பை வழங்குவதுடன், நீடித்த மற்றும் நிலையான ஊரக சொத்துக்களை உருவாக்கி, உள்ளூர் மக்களின் முனைப்பான பங்கேற்புடன் கிராமங்களை மேம்படுத்தும் ஒரே திட்டமாகும் என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இத்திட்டம் அனைவரையும் உள்ளடக்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், இத்திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களில் 86 விழுக்காடு மகளிர், 29 விழுக்காடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர் என்பதையும் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் தேசிய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் பல்வேறு அளவீடுகளில் தமிழ்நாடு எப்போதும் திட்டச் செயலாக்கத்தில் முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்பதையும் முதலமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இதுவரை, மூன்று தவணைகளில் 37 கோடி மனித சக்தி நாட்களுக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்றும் 06.03.2024 வரை தமிழ்நாடு 40.51 கோடி மனித சக்தி நாட்களை எட்டியுள்ளது என்றும் இதில் 68.68 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 79.28 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2023–24ஆம் ஆண்டில், 06.11.2024 வரை தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவேண்டிய ஊதியமான ரூ.8,734.32 கோடி நிலையில், ரூ.7,712.03 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும் நவம்பர் 2023 மற்றும் டிசம்பர் 2023 ஆகிய ஆண்டுகளுக்கான ஊதியப் பொறுப்பு 05.01.2024 அன்று ரூ.1,022.29 கோடியாக உள்ளதையும் முதலமைச்சர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக, தாம் 10.01.2024 அன்று ஊதியத்தை முன்கூட்டியே வழங்குமாறு ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதியதையடுத்து, ஒன்றிய அரசு 15.01.2024 மற்றும் 30.01.2024 ஆகிய நாட்களில் ரூ.1,388.91 கோடி ஊதியத்தை விடுவித்தமைக்காக தனது நன்றியையும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், நவம்பர் 2023 கடைசி வாரத்திலிருந்து திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் தொழிலாளர்களுக்கு வழங்கப்படாததால், அதனுடன் பொறுப்புத் தொகையும் ரூ.1,678.83 கோடியாக சேர்ந்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், இது டிசம்பர் 2023 முதல் பிப்ரவரி 2024 வரை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணிபுரிந்த 24.21 லட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, 05.01.2024 வரை திரட்டப்பட்ட மொத்த ஊதிய பொறுப்புத் தொகையான ரூ.1,678.83 கோடியை தொழிலாளர்களுக்கு உடனடியாக ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும்; இது தொடர்பாக ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் அமைச்சர் அவர்களின் தனிப்பட்ட தலையீட்டை தாம் எதிர்பார்ப்பதாகவும் தமது கடிதத்தில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## திருவள்ளூர்

### வங்கி உதவி மேலாளரை தாக்கிய பா.ஜ.க. நிர்வாகி கைது !

*திருவள்ளூர், மார்ச் 15-*

ஏ.டி.எம். மையத்தில் ஊழியர்களை தாக்கி பா.ஜ.க நிர்வாகி அடாவடி செயலில் ஈடுபட்டதையடுத்து கைது செய்யப்பட்டார்.

திருவள்ளூர் அருகே வங்கி உதவி மேலாளரை தாக்கிய பா.ஜ.க. நிர்வாகியை காவல்துறையினர் கைது செய்தனர். திருவள்ளூர் அடுத்த மணவாள நகரில் தனியார் வங்கியில் உள்ள ஏ.டி.எம். மையத்தில் இயந்திரத்தை ஊழியர்கள் சர்வீஸ் செய்து கொண்டிருந்தனர். அப்போது ஏ.டி.எம். மையத்திற்கு வந்த பா.ஜ.க. மாநில இளைஞரணி செயற்குழு உறுப்பினர் அபிலாஷ் என்பவர், ஏ.டி.எம்.மில் பணம் எடுக்க வேண்டும் என்றுகூறி, வங்கி ஊழியர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். இயந்திரம் சர்வீஸ் செய்யப்படுவதாக ஊழியர்கள் கூறியதை மதிக்காமல் அவர்களை பா.ஜ.க. நிர்வாகி அபிலாஷ் கொடூரமாக தாக்கியுள்ளார்.

பா.ஜ.க. நிர்வாகி தாக்கியதில் காயமடைந்த வங்கி உதவி மேலாளர், காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இதையடுத்து, பா.ஜ.க. நிர்வாகி அபிலாஷை காவல்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

---

## நற்பெயருக்கு களங்கம் கற்பிக்க முயற்சி!

# பழனிசாமி - அண்ணாமலை மீது முதல்வர் அவதூறு வழக்கு!

### சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ளார்!

*சென்னை, மார்ச் 15-*

போதைப் பொருள் தடுப்பில் தமிழ்நாடு அரசு கடும் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், பொய் தகவல்களை பரப்பி வரும் எடப்பாடி பழனிசாமி மற்றும் பா.ஜ.க., மாநிலத் தலைவர் அண்ணாமலை மீது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சார்பில் அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நடவடிக்கைகளால் தமிழ்நாடு போதைப் பொருள் இல்லா மாநிலமாக திகழ்ந்து வருகிறது. ஆனால், இந்த விவகாரத்தில் முதலமைச்சர் மீது அவதூறு பரப்பும் வகையில், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமியும், பா.ஜ.க., மாநிலத் தலைவர் அண்ணாமலையும் செயல்பட்டு வருகின்றனர். இதற்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

பா.ஜ.க., ஆளும் மாநிலங்களில்தான் போதைப் பொருட்கள் புழக்கம் தலைவிரித்தாடுவதாகவும், அம்மாநிலங்களில் தான் போதைப் பொருட்கள்உற்பத்திசெய்யப்பட்டு, நாட்டின் மற்ற மாநிலங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது என்றும் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்நிலையில், போதைப் பொருள் விவகாரத்தில் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வரும் முதலமைச்சரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கிலும், அவதூறு பரப்பும் வகையிலும் செயல்பட்டு வரும் எடப்பாடி பழனிசாமி மற்றும் பா.ஜ.க., மாநிலத் தலைவர் அண்ணாமலை மீது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளது. சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சென்னை மாநகர குற்றவியல் வழக்கறிஞர் ஜி. தேவராஜன் இந்த அவதூறு வழக்கை தொடர்ந்துள்ளார். இருவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

---

## டெல்லி ராம்லீலா மைதானத்தில்

# விவசாயிகள் போராட்டம் தீவிரமடைந்தது !

### ஒன்றிய அரசு போராட்டத்தை ஒடுக்க நடவடிக்கை !

புதுடெல்லி, மார்ச் 15–

குறைந்தபட்ச ஆதார விலைக்கான உத்தரவாதம் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றாத ஒன்றிய பா.ஜ.க., அரசைக் கண்டித்து டெல்லி ராம் லீலா மைதானத்தில் விவசாயிகள் மகா பஞ்சாயத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்யுக்தா கிசான் சங்கம் சார்பாக டெல்லியில் ஒரு நாள் மகா பஞ்சாயத்து போராட்டம் நேற்று நடைபெற்றது. டெல்லி ராம்லீலா மைதானத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் திரண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். பெண் விவசாயிகளும் அதிகளவில் பங்கேற்று ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கம் எழுப்பி தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

இதனிடையே விவசாயிகள் போராட்டத்திற்கு பல்வேறு நிபந்தனைகளை டெல்லி போலீசார் விதித்தனர். டிராக்டர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. பேருந்து மற்றும் ரயில் மூலம் வரும் விவசாயிகளை மட்டுமே டெல்லி காவல்துறையினர் அனுமதித்தனர். நேற்று ஒரு நாள் மட்டுமே இந்த போராட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. விவசாயிகள் போராட்டம் காரணமாக டெல்லியில் பல்வேறு போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 15-03-2024

# பா.ஜ.க.வின் ஊழல் முகம் கிழிகிறது

பா.ஜ.க.வின் முகத்திரையைக் கிழித்து அதன் ஊழல் முகத்தை அம்பலப்படுத்தி விட்டது உச்சநீதிமன்றம்.

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான வழக்கு, உச்சநீதிமன்றத்தில் சிறப்பு அரசியல் சாசன அமர்வில் விசாரணை நடைபெற்று வருகிறது. இதில் வசமாக சிக்கிக் கொண்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஊழலை சட்டபூர்வமாக ஆக்கிக் கொள்வதில் கைதேர்ந்தவர்கள் பா.ஜ.க.வினர். தேர்தல் பத்திரங்களின் மூலமாக தனது கட்சிக்கு அதிகப்படியான நிதியைத் திரட்டிக் கொள்வதை வழக்கமாக வைத்துள்ளது பா.ஜ.க.

2017 முதல் 22 வரையிலான காலக்கட்டத்தில் மட்டும் 5 ஆயிரத்து 272 கோடி ரூபாயைத் திரட்டி இருக்கிறது பா.ஜ.க. இது கருப்புப் பணத்தை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்தபோதும் பா.ஜ.க. அதனை நியாயப்படுத்தி வந்தது. இந்தத் தேர்தல் பத்திர முறை சட்டவிரோதமானது என்று கூறி அதனைத் தடை செய்ய உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கடந்த பிப்ரவரி 15 அன்று உச்சநீதிமன்றம் இந்தத் தேர்தல் பத்திர முறையையே தடை செய்து விட்டது.

**“எங்களுக்கு யார் நன்கொடைகள் வழங்கியது என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை” என்ற ‘ஊழல் மலிந்த’ பதிலை ஒன்றிய பா.ஜ.க. அரசு உச்சநீதிமன்றத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சொல்லி இருந்தது. இதுதான் பா.ஜ.க. அரசின் உண்மையான ஊழல் முகம் ஆகும்.**

ஒன்றிய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா அப்போது என்ன சொன்னார் தெரியுமா?

**“நன்கொடை யார் வழங்கியுள்ளனர் என்பது அதனைப் பெறும் கட்சிக்கு மட்டுமே தெரியும். மற்ற கட்சிகளுக்குத் தெரியாமல் ரகசியம் காப்பதுதான் இந்தத் திட்டம்” என்று குறிப்பிட்டார். அப்போது, குறுக்கிட்ட தலைமை நீதிபதி எஸ்.ஏ.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, “அப்படியானால் வாக்காளர்களின் உரிமை என்ன? ஏன் நன்கொடை விபரங்களை வாக்காளர்கள் தெரிந்துகொள்ளக் கூடாது?” என்று கேள்வி எழுப்பினர்.**

**தேர்தல் ஆணைய வழக்கறிஞரிடமும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பினார்கள். “தேர்தல் பத்திர நடைமுறையால் பாதிப்பு எதுவும் உள்ளதா? அது குறித்து ஆய்வுகள் எதுவும் நடத்தப்பட்டதா? இதுவரை பெறப்பட்டுள்ள நன்கொடை தொகை எவ்வளவு? என்பது உள்பட பல கேள்விகளுக்குத் தேர்தல் ஆணையம் உரிய பதிலை அளிக்கவில்லை” என நீதிபதிகள் தெரிவித்தனர்.**

ஒன்றிய அரசின் அட்டர்னி ஜெனரல் வாதிடும் போது, “பொதுமக்கள் எதை வேண்டுமானாலும் எதைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் நிலை இருக்கக் கூடாது. நியாயமான கட்டுப்பாடுகள் தேவை” என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

**“சில நிறுவனங்கள் மொத்த வருவாயையும் அரசியல் நன்கொடையாக வழங்குவதை அனுமதிப்பது ஏன்? முன்பு நிகர லாபத்தில் ஒரு பகுதிதான் நன்கொடையாக வழங்க முடியும் என்ற விதிமுறை இருந்தது. தற்போது லாபம் இல்லாத நிறுவனங்கள் கூட மொத்த வருவாயையும் நன்கொடையாக வழங்க முடியும் என்று மாற்றப்பட்டுள்ளது. நிறுவனம் நடத்துவது நன்கொடை வழங்குவதற்காக அல்ல. இதனை சரிசெய்ய நிறுவனங்கள் சட்டத்தில் திருத்தம் தேவை. இதுபோன்ற பிரச்சினைகளை சரிசெய்ய ஒரு சமநிலையான நன்கொடை திட்டத்தை உருவாக்கலாம். அது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை அரசும், நாடாளுமன்றமும்தான் முடிவு செய்ய வேண்டும்” என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். இவை அனைத்தும் விசாரணையின் போது நடந்தவை ஆகும்.**

பிப்ரவரி 15 ஆம் தேதி ஒட்டுமொத்தமாக முற்றுப்புள்ளி வைத்தது உச்சநீதிமன்றம். மார்ச் 6 ஆம் தேதிக்குள் 2019 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட அனைத்து தேர்தல் பத்திரங்கள் தொடர்பான விபரங்களையும் தேர்தல் ஆணையத்திடம் எஸ்.பி.ஐ. வங்கி வழங்க வேண்டும் என்று சொன்னது உச்சநீதிமன்றம். அப்படிக் கொடுத்தால் தங்களது ஊழல் முகம் அம்பலமாகி விடும் என பயந்தது பா.ஜ.க. - எனவே இழுத்தடிக்கப் பார்த்தார்கள். சூன் 30 வரை கால அவகாசம் வேண்டும் என்றார்கள். அதற்குள் தேர்தலை முடித்துவிடத் திட்டம். ஆனால் இதனையும் உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை.

“பிப்ரவரி 15 முதல் மார்ச் 6 வரை நீங்கள் என்ன செய்து கொண்டு இருந்தீர்கள்?” என்று நாக்கைப் பிடுங்குவதைப் போல கேட்டு விட்டார்கள் நீதிபதிகள். **“கடந்த 26 நாட்களாக எஸ்.பி.ஐ. என்ன செய்துகொண்டிருந்தது? அனைத்து விவரங்களும் கைவசம் இருக்கும் போது ஏன் அவகாசம்? தீர்ப்பில் கூறப்பட்டதை அப்படியே செயல்படுத்த வேண்டியது தானே? கடந்த 26 நாட்களில் 10,000 தகவல்களையாவது சேகரித்திருக்கலாம். இடைக்கால உத்தரவு பிறப்பித்த போது சீல்டு கவரில் வழங்கப்பட்ட ஆவணங்களை அப்படியே தேர்தல் ஆணையத்திற்கு வழங்க வேண்டியதுதானே? நாட்டின் மிகப் பெரிய வங்கியால் தேர்தல் பத்திரங்கள் குறித்த தகவல்களை விரைவில் சேகரித்து வழங்க இயலாதா?”** என்று சரமாரியாகக் கேள்வி எழுப்பினார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள்.

பத்திர விபரங்களை 12 ஆம் தேதி மாலைக்குள் தேர்தல் பத்திர விபரங்களை வெளியிட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. எஸ்.பி.ஐ.க்கு வேறு வழியில்லை. விபரங்களை தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைத்துவிட்டது எஸ்.பி.ஐ. உச்சநீதிமன்றம் உத்தரவுப் படி தேர்தல் பத்திரங்கள் வாங்கியவர்களின் விபரங்களை தேர்தல் ஆணையம் மார்ச் 15 ஆம் தேதி மாலை 5 மணிக்குள் இணையத் தளத்தில் வெளியிட வேண்டும்.

**2017 முதல் 2022 வரையிலான ஆண்டுகளில் பா.ஜ.க. மட்டும் ரூ.5272 கோடி நன்கொடை பெற்றுள்ளது. இது மொத்த நிதியில் 58 சதவிகிதம் ஆகும். இதனால்தான் மக்கள் தெரிந்துகொள்ளக் கூடாது என்கிறது பா.ஜ.க. இணையத்தளத்தில் இத்தகவல்கள் வெளியானால் பா.ஜ.க.வின் ஊழல் முகத்திரை கிழிந்துவிடும்.**

••



முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (13.3. 2024) முகாம் அலுவலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் 9,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் வாகன உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு அரசிற்கும் டாடா மோட்டார்ஸ் குழுமத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், சிப்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கி. செந்தில்ராஜ், மற்றும் டாடா குழுமத்தின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### ரூ.9000 கோடி முதலீடு: 5000 பேருக்கு வேலை! இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# டாடா மோட்டார்ஸ் குழுமம் சார்பில் வாகன உற்பத்தி தொழிற்சாலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

*சென்னை, மார்ச் 15 -*

டாடா மோட்டார்ஸ் குழுமம் 9,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், வாகன உற்பத்தி தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (13.3.2024) முகாம் அலுவலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் 9,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் வாகன உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு அரசிற்கும் டாடா மோட்டார்ஸ் குழுமத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இலக்கினை விரைவில் அடைவதற்காக தமிழ்நாடு அரசின் தொழில் துறை பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.

மேலும், அதிக அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப்படக்கூடிய உயர் தொழில் நுட்பம் சார்ந்த தொழில்களையும் (capital intensive hightech Industries), பெருமளவிலான வேலை வாய்ப்புகளை அளிக்கக்கூடிய தொழில்களையும் (Employment intensive Industries) ஈர்த்திட பல்வேறு முயற்சிகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, சென்னையில் ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு மிகவும் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு, முன்னெப்போதும் இல்லாத அளவாக, ரூ.6,64,180 கோடி முதலீடு மற்றும் 26,90,657 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு என்ற வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் இன்று டாடா மோட்டார்ஸ் குழுமம் வாகன உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்

வாகன உற்பத்தித் திட்டத்தில், டாடா மோட்டார்ஸ் நிறுவனம், 5 ஆண்டுகளில், 9000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், இராணிப்பேட்டை மாவட்டத்தில் இத்தொழிற்சாலையை அமைக்க திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வாகனத் தொழிற்சாலை அமைக்கப் படுவதற்காக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு அரசின் முதலீடு ஊக்குவிப்பு முகமையான வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, மற்றும் டாடா மோட்டார்ஸ் குழுமத்தின் தலைமை நிதி அலுவலர் P.B. பாலாஜி ஆகியோரிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், சிப்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கி.செந்தில்ராஜ் மற்றும் டாடா குழுமத்தின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### எஸ்.பி.ஐ. வங்கி உட்பட அரசு நிறுவனங்கள்

# பிரதமர் மோடி கட்டுப்பாட்டில் உள்ளது வெட்ட வெளிச்சமாகியுள்ளது!

## டி.ஆர்.பாலு எம்.பி. விமர்சனம்!

*செங்கல்பட்டு, மார்ச் 15-*

எஸ்.பி.ஐ. உட்பட அரசு நிறுவனங்கள் பிரதமர் கட்டுப்பாட்டில் இருப்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது, தேர்தல் பத்திரங்கள் விவரங்களில் ஜூன் மாதம் வரை கால அவகாசம் கேட்ட எஸ்.பி.ஐ. வங்கி, உடனடியாக எப்படி அளித்தார்கள் என நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பியுள்ளார்.

மழைக்காலத்தின்போது ஏரிகளில் இருந்து வரும் உபரி நீரால் செங்கல்பட்டு மாவட்டம் இரும்புலியூர் பகுதியில் உள்ள குடியிருப்புகள் நீரில் மூழ்கி வருகிறது.

இதனை தடுக்க நீர்வள ஆதாரத்துறை சார்பில் 96 கோடியே 50 லட்சம் செலவில் கட் அண்ட் கவர் கால்வாய் அமைக்கும் பணிகளை திருபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு நேற்று தொடங்கி வைத்தார்.



அப்போது தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, மேயர் வசந்தகுமாரி துணை மேயர் காமராஜ், மாநகராட்சி ஆணையர் அழகுமீனா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு, தேர்தல் பத்திர பங்கு விவகாரத்தில் எஸ்.பி.ஐ. வங்கி ஜூன் மாதம் வரை அவகாசம் கேட்டார்கள்,

உச்சநீதிமன்றம் கண்டித்ததையடுத்து உடனடியாக அது தொடர்பான ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டார்.

இதன்மூலம் எஸ்.பி.ஐ. உட்பட எல்லா அரசு நிறுவனங்களும் பிரதமருக்கு கட்டுப்பட்டு நடப்பது வெட்ட வெளிச்சமாகியிருப்பதாக டி.ஆர்.பாலு விமர்சித்தார்.

### தென்னை விவசாயிகளின் நலன் - பயறு வகை சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில்

# விலை ஆதரவுத் திட்டத்தில் தேங்காய் - உளுந்து - பச்சைப் பயறு கொள்முதல்!

## வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

*சென்னை, மார்ச் 15 -*

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நடப்பாண்டில் தமிழ்நாட்டில் தென்னைப் பயிரிடும் விவசாயிகளின் நலனைக் காத்திடவும், பயறு வகை சாகுபடியினை ஊக்குவித்து, உற்பத்தியினை அதிகரித்திடவும் விலை ஆதரவு திட்டத்தில் கொப்பரைத் தேங்காய், உளுந்து மற்றும் பச்சைப் பயறு கொள்முதல் செய்யப்பட உள்ளது.

**கொப்பரைத் தேங்காய் கொள்முதல்!**

தமிழ்நாட்டில் 4.577 இலட்சம் எக்டர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகின்றது. தேங்காய்களை மதிப்புக்கூட்டி கொப்பரைகளாக விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர். சமீப காலமாக, கொப்பரைத் தேங்காய்களின் விலை குறைந்தபட்ச ஆதரவு விலையை விட மிக குறைவாக இருந்து வருகின்றது.

தமிழகத்திலுள்ள கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, தேனி, ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், தென்காசி, புதுக்கோட்டை, திருப்பத்தூர், மதுரை, விருதுநகர், நாமக்கல், சிவகங்கை, வேலூர், இராமநாதபுரம், கரூர், தூத்துக்குடி, தருமபுரி, திருவாரூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், மற்றும் மயிலாடுதுறை ஆகிய 26 மாவட்டங்களில் உள்ள 75 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் கடந்த ஆண்டில் 48,364 விவசாயிகளிடமிருந்து 79,021.80 மெ.டன் அரவை கொப்பரை ரூ.858.176 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டு 2024ல் பந்துக் கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.120.00ம் மற்றும் அரவைக் கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.111.60ம் குறைந்தபட்ச ஆதரவு விலையாக வழங்கப்பட உள்ளது.

விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசினை வலியுறுத்தியதன் அடிப்படையில் 90,300 மெ.டன் என்ற அளவில் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு கொப்பரை கொள்முதலுக்கான அனுமதி ஒன்றிய அரசிடமிருந்து வரப் பெற்றுள்ளது. இத்திட்டம் 2024 நடப்பாண்டில் இன்று முதல் 10.06.2024 வரை நடைமுறைப்படுத்தப்படும்.

அதேபோல, பயறு அறுவடை காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியினால் நியாயமான விலை கிடைக்காமல் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர். இத்தருணங்களில் விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் உளுந்து மற்றும் பச்சைப்பயறு ஆகியவற்றை விவசாயிகளிடமிருந்து நேரடியாக அரசு கொள்முதல் செய்து வருகின்றது.

தமிழ்நாட்டில் இன்று முதல் 10.06.2024 வரை தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, திண்டுக்கல், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், விருதுநகர், இராமநாதபுரம், இராணிப்பேட்டை, தேனி, கரூர், செங்கல்பட்டு, திருப்பூர், சேலம், நாமக்கல் ஆகிய 17 மாவட்டங்களிலும், 01.04.2024 முதல் 29.06.2024 வரை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், திருச்சிராப் பள்ளி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 7 மாவட்டங்களிலும் உள்ள 53 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் 1,42,780 மெட்ரிக்டன் உளுந்து குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட உள்ளது. உளுந்து கிலோ ஒன்றுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக ரூ.69.50 வழங்கப்படும்.



மேலும், பச்சைப்பயறானது, இன்று முதல் 10.06.2024 வரை திருவள்ளூர் மாவட்டத்திலும், 01.04.2024 முதல் 29.06.2024 வரை தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மற்றும் கடலூர் ஆகிய 5 மாவட்டங்களிலும் உள்ள 11 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் 1,860 மெட்ரிக்டன் பச்சைப்பயறு குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட உள்ளது. பச்சைப்பயறு கிலோ ஒன்றுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக ரூ.85.58 வழங்கப்படும்.

எனவே, தென்னை, உளுந்து, பச்சைப் பயறு பயிரிட்டுள்ள விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அணுகி தங்களது பெயர்களை உரிய ஆவணங்களுடன் பதிவு செய்து அதிக அளவில் பயன்பெறுமாறு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.



இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டு விழாவில் கல்வி மற்றும் கலைத்துறையில் சிறந்து விளங்கிய மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார். அருகில் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றியக் குழு தலைவர் சேஷாவெங்கட ரமணன், கல்லூரி முதல்வர் சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.3.2024) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 4 சதவீத அகவிலைப்படி உயர்த்தி அறிவித்தமைக்காக தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், தமிழ்நாடு அனைத்து ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் மாநில மையச் சங்கம், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அனைத்துப் பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் (தியோடர்), தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தொழில்கல்வி ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு வேளாண்மை பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை பணியாளர் கழகம், டாக்டர் ராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழக இடைநிலை மற்றும் பதவி உயர்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர் மன்றம் (தீபம்), தமிழக பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், JSR தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசுத் தேர்வுத்துறை பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆசிரியர் காப்பாளர் சங்கம், தமிழ்நாடு முதுகலை பட்டதாரி தொழிற்கல்வி ஆசிரியர் சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், டாக்டர் இராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் இயக்கம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# ‘கலைஞர் எழுதுகோல்’ விருதுக்கு விண்ணப்பங்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மார்ச் 15-

‘கலைஞர் எழுதுகோல்’ விருதுக்கு விண்ணப்பங்களை வரவேற்று தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை அறிக்கை வெளியிட்டுள்ளது. அது வருமாறு :

ஒவ்வோர் ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜுன் 3 ஆம் நாளன்று, ஒரு சிறந்த இதழியலாளருக்கு “கலைஞர் எழுதுகோல்” விருது வழங்கி கெளரவிக்கப்படும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வகையில் 2023 ஆம் ஆண்டிற்கான இவ்விருதுக்குரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விருதில் ரூபாய் ஐந்து இலட்சம் பரிசுத் தொகையுடன் பாரட்டுச் சான்றிதழும் அடங்கும். கலைஞர் எழுதுகோல் விருதிற்கான தகுதிகள் பின்வருமாறு: -

விண்ணப்பதாரர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

தமிழ் இதழியல் துறையில் குறைந்தபட்சம் பத்து ஆண்டுகளாக தொடர்ந்து பணிபுரிந்திருக்க வேண்டும்.

பத்திரிகைப் பணியை முழுநேரப் பணியாகக் கொண்டிருக்க வேண்டும்.

இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், பங்காற்றியிருக்க வேண்டும்.

விண்ணபதாரரின் எழுத்துகள் பொதுமக்களிடையே நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் நேரடியாகவோ, மற்றொருவர் பரிந்துரையின் அடிப்படையிலோ பணிபுரியும் நிறுவனத்தின் பரிந்துரையின் பேரிலோ விண்ணப்பங்களை அனுப்பலாம்.

விண்ணப்பதாரர்களில் ஒருவரே விருதாளராக அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்.

**குழுவின் முடிவே இறுதியானது.**

மேற்காணும் தகுதிகளைக் கொண்ட விண்ணப்பங்கள், விரிவான தன் விவரங்கள் மற்றும் அவற்றுக்குரிய ஆவணங்களுடன் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை 600 009 என்ற முகவரிக்கு 30.04.2024 க்குள்ளாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒரே நாடு – ஒரே தேர்தல் அறிக்கை!

## குடியரசுத் தலைவரிடம் - ராம்நாத் கோவிந்த் குழு வழங்கியது!

புதுடெல்லி, மார்ச் 15 -

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்து ஆய்வு அறிக்கையை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவிடம் உயர்நிலைக் குழு சமர்ப்பித்துள்ளது.

நாடு முழுவதும் ஒரே நேரத்தில் மக்களவை, சட்டப்பேரவைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவது தொடர்பாக ஆய்வுசெய்து அறிக்கை தாக்கல் செய்ய முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் கடந்த செப்டம்பர் மாதம் ஒன்றிய அரசு குழு அமைத்தது. நாடு முழுவதும் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சட்ட வல்லுநர்கள் உள்பட பல்வேறு தரப்பிடம் கருத்துகள் கேட்கப்பட்டது. ஒரே நாடு - ஒரே தேர்தல் திட்டத்திற்கு தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

ஒரே நாடு, ஒரே தேர்தல் முறை நடைமுறைக்கு சாத்தியமற்றது எனவும் அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சத்திற்கு எதிரானது என்றும், உயர்நிலைக்குழுவிடம் கடந்த ஜனவரி மாதம் 17 ஆம் தேதி தி.மு.க. கடிதம் எழுதியிருந்தது. ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்தை கைவிடக்கோரி, கடந்த மாதம் 10 ஆம் தேதி ராம்நாத் கோவிந்த் தலைமையிலான குழுவை, தி.மு.க. சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் நேரில் சந்தித்தும் வலியுறுத்தினார்.

ஆனால், எதிர்க்கட்சிகளின் கருத்துகளை புறக்கணித்து, 2029 ஆம் ஆண்டு ஒரே நாடு, ஒரே தேர்தல் நடத்துவதற்கான ஆய்வறிக்கையை உயர்மட்டக்குழு தயார் செய்துள்ளது. 18 ஆயிரத்து 626 பக்கங்கள் கொண்ட ஆய்வறிக்கையை, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவிடம் சமர்ப்பித்துள்ள உயர்மட்டக்குழு, ஒரே நாடு, ஒரே தேர்தலுக்காக அரசமைப்பு சட்டத்தில் திருத்தம் செய்ய பரிந்துரை செய்துள்ளது.

### 10 ஆண்டு கால ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில்

# விவசாயிகள் கடன் தள்ளுபடி விபரத்தை மோடி கூற முடியுமா?

## ராகுல்காந்தி கேள்வி!



மும்பை, மார்ச் 15-

ஒன்றிய பா.ஜ.க., அரசின் 10 ஆண்டுகால ஆட்சியில் எவ்வளவு விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து பிரதமர் மோடியால் கூற முடியுமா என்று காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல்காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் பாரத் ஜோடா பயணத்தை ராகுல்காந்தி மேற்கொண்டார். அவரது நடைபயணத்தில் தேசியவாத காங்கிரஸ் கட்சி தலைவர் சரத்பவார் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

அப்போது விவசாயிகளை சந்தித்து அவர்களுடன் ராகுல்காந்தி கலந்துரையாடினார். இதன்பின்பு செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் மிகப்பெரிய பிரச்சினைகளாக பணவீக்கம், வேலைவாய்ப்பின்மை, விவசாயிகள் சந்தித்து வரும் பிரச்சினை உள்ளிட்டவை இருப்பதாக கூறினார். ஆனால் இந்த பிரச்சினைகள் குறித்து விவாதிக்க மோடி அரசு தயாராக இல்லை என்று அவர் குற்றம்சாட்டினார். விளைப் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை வழங்கப்படும், அவர்களின் வருமானம் இரட்டிப்பாக்கப்படும் என்ற பிரதமர் மோடியின் வாக்குறுதிகள் என்னவாயிற்று என்று அவர் வினவினார்.

10 ஆண்டுகால பா.ஜ.க., ஆட்சியில் எவ்வளவு விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டது என்பது குறித்து பிரதமர் மோடியால் கூற முடியுமா என்று ராகுல்காந்தி கேள்வி எழுப்பினார். விவசாயிகளுக்கு ஒரு ரூபாய் கடனை கூட தள்ளுபடி செய்யாதவர் தான் மோடி என்று அவர் விமர்சித்தார். ஆனால், பெரு முதலாளிகளின் 16 லட்சம் கோடி ரூபாய் கடன்கள் மட்டும் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக ராகுல்காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

கோரிக்கைகளை நிறைவேற்றாததால்தான் டெல்லி ராம்லீலா மைதானத்தில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று ராகுல் காந்தி கூறினார்.

இதனிடையே காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூகவலைத்தளப் பதிவில், விவசாயிகளுக்கு 5 தேர்தல் வாக்குறுதிகளை ராகுல்காந்தி அளித்துள்ளார் என்று தெரிவித்துள்ளார். குறைந்தபட்ச ஆதார விலைக்கு சட்ட அங்கீகாரம், இதற்காக நாடாளுமன்றம் மூலம் சிறப்பு சட்டம், சுவாமிநாதன் ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் உள்ளிட்ட வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் நிலுவை கடன்களை ஆராய்ந்து தள்ளுபடி செய்ய குழு அமைக்கப்படும், மழை, வெள்ளம், வறட்சி போன்ற பேரிடர் காலங்களில் பாதிக்கப்படும் பயிர்களுக்கு உரிய காலத்திற்குள் வங்கி கணக்குகள் மூலம் நிவாரணத்தொகை உள்ளிட்ட வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளதாக ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டுள்ளார். விவசாயப் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் கொள்கையில் சீர்திருத்தம், விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களுக்கு ஜி.எஸ்.டி., வரியிலிருந்து விலக்கு உள்ளிட்ட வாக்குறுதிகளை ராகுல்காந்தி அளித்துள்ளதாக ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

### வார இறுதி நாட்களை முன்னிட்டு – தமிழ்நாடு

# அரசு போக்குவரத்துக் கழகம் வாயிலாக சிறப்பு பேருந்து இயக்கம்!

## அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தகவல்!

சென்னை, மார்ச் 15-

வார இறுதி நாட்களை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் வாயிலாக சிறப்பு பேருந்து இயக்கப்படுகிறது என அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த செய்தி வெளியீடு வருமாறு:-

15/03/2024 (வெள்ளிக்கிழமை) 16/03/2024 (சனிக்கிழமை) மற்றும் 17/03/2024 (ஞாயிறு) விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 15/03/2024 (வெள்ளிக்கிழமை) அன்று 360 பேருந்துகளும் 16/03/2024 (சனிக்கிழமை) அன்று 420 பேருந்துகளும் மற்றும் சென்னை கோயம்பேட்டிலிருந்து நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 15/03/2024 (வெள்ளிக்கிழமை) அன்று 70 பேருந்துகளும் மற்றும் 16/03/2024 (சனிக்கிழமை) அன்று 70 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆக தினசரி இயக்கக் கூடிய பேருந்துகளுடன் கூடுதலாக 15/03/2024 (வெள்ளிக்கிழமை) அன்று 360 சிறப்பு பேருந்துகளும் 16/03/2024 (சனிக்கிழமை) அன்று 420 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் மற்றும் பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது .

இந்நிலையில், இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை பயணம் மேற்கொள்வதற்கு இதுவரை 4519 பயணிகள் சனிக்கிழமை1710 பயணிகள் மற்றும் ஞாயிறு அன்று 4142 பயணிகளும் முன்பதிவு செய்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.inமற்றும் Mobile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

### ரூ.33 லட்சத்தில் மேலமாத்தூர் ஊராட்சி மன்ற புதிய அலுவலகம் கட்ட அடிக்கல்!

# ரூ.20 லட்சத்தில் பல்வேறு சிமெண்ட் சாலை பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

பெரம்பலூர், மார்ச் 15 -

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம், மேலமாத்தூர் ஊராட்சியில், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், ஊராட்சி மன்ற புதிய அலுவலகம் கட்டுவதற்கு ரூ.33 லட்சத்தில் அடிக்கல் நாட்டி, பல்வேறு சிமெண்ட் சாலைப் பணிகளுக்கு ரூ.20 லட்சம் மதிப்பில் பணிகளை துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஆலத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளரும் ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவருமான என்.கிருஷ்ணமூர்த்தி, வட்டாட்சியர் சத்தியமூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் சேகர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வ.சுப்ரமணியன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கடலூர் மேற்கு மாவட்டம்

# நெய்வேலி நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி நகரச் செயலாளராக பணியாற்றி வரும் வி.பக்கிரிசாமி அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக தான் வகித்து வந்த நகரச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **வீ.குருநாதன்**, (சி - 20, சுரங்க சாலை, வட்டம்-24, நெய்வேலி டவுன்ஷிப், கடலூர் மாவட்டம்.) அவர்கள் நெய்வேலி நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 14.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை இழிவாகப் பேசிய பி.ஜே.பி.யைச் சேர்ந்த நடிகை குஷ்புவைக் கண்டித்து தேனி தெற்கு மாவட்டம் உத்தமபாளையத்தில் மகளிர் அணி சார்பில் தேனி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மகாராஜன் எம்.எல்.ஏ., ஒன்றியச் செயலாளர் அணைப்பட்டி முருகேசன், பேரூர்ச் செயலாளர் – பேரூராட்சித் தலைவர் காசிம் மற்றும் மகளிர் அணி ஒன்றிய, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றியம், கணியாகுளம் ஊராட்சி பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் சக்திவேல் பிரபு தலைமையில் மாற்றுக் கட்சியினர் 50க்கும் மேற்பட்டோர் 13.03.2024 அன்று நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் சற்குருகண்ணன், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ்க்கு சால்வை அணிவித்து தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் கணபதிபுரம் பேரூர்ச் செயலாளர் பிரபா எழில், நாகர்கோவில் மாநகர துணைச் செயலாளர் வேல்முருகன், மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் குமாரசாமி, நாகர்கோவில் தொகுதி மருத்துவ அணி துணை அமைப்பாளர் மருத்துவர். வேல்ராஜ், டேனியல் ரஞ்சன், டேனியல், கிருஷ்ணன், இளங்கோ, மாதவன் உட்பட ஊராட்சி, கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




நெல்லை மாவட்டம் பாளையங் கோட்டை வட்டம் ரெட்டியார் பட்டி மழையடி வாரத்தில் பொருநை அருங்காட்சியம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் நேரில் பார்வையிட்டனர். உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், ஞானதிரவியம் எம்.பி.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. மேயர் சரவணன், ஆணையாளர் தாக்கரேசுபம் ஞானதேவ்ராவ், துணைமேயர் ராஜ், விஜிலாசத்யானந்த், மாலைராஜா உள்பட பலர் உள்ளனர்.

### ரூ.26.33 கோடியில் கட்டிடப் பணிகள் துவக்கம்! ரூ.5 கோடி 35 லட்சம் மதிப்பில் - நெல்லை மாவட்டம்

# பாளையங்கோட்டையில் 1200 பயனாளிகளுக்கு சிறப்பு பட்டா - நலத்திட்ட உதவிகள்!

### பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் - அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்!

நெல்லை, மார்ச் 15 - நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை நேருஜி கலை அரங்கில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1200 பயனாளிகளுக்கு ரூபாய் 5 கோடி 35 லட்சத்து 46 ஆயிரத்து 041 மதிப்பில் சிறப்பு பட்டா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று நலத்திட்ட உதவிகளையும் ரூபாய் 26.33 கோடி மதிப்பில் நிறைவடைந்த கட்டிடப் பணிகளையும் துவக்கி வைத்தார்.

நெல்லை பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டு 1200 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் ரூபாய் 5 கோடியே 35 லட்சத்து 46 ஆயிரத்து 041 மதிப்பில் வழங்கும் நிகழ்வு மற்றும் முடிவுற்ற திட்ட பணிகள் ரூபாய் 28 கோடியே 22 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பில் துவக்க விழா நிகழ்வு சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மாநகராட்சி மேயர் சரவணன், ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், துணை மேயர் ராஜ், தேவாலய உபதேசிகள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய தலைவர் விஜிலா சத்யானந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று 1200 பயனாளிகளுக்கு ரூபாய் 5 கோடியே 35 லட்சத்து 46 ஆயிரத்து 041 மதிப்பில் நலத்திட்ட உதவிகளும், முடிவுற்ற திட்டப்பணிகள் ரூபாய் 28 கோடியே 22 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பில் பணிகளையும் ஆக மொத்தம் 33 கோடியே 58 லட்சத்து 06,041மதிப்பிலும்,ரூபாய் 3.16 கோடி மதிப்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் துவக்கி வைத்தார்.

நிகழ்வில் பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து வளர்ச்சி திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.இன்று ரூபாய் 33.58 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கி நிறைவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து,புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.சாமானிய மகளிர் பயன்பெறும் வகையில் மகளிர்க்கு கட்டணம் இல்லா பேருந்து பயணத் திட்டம் சுமார் 50 லட்சம் மகளிர் பயன்பெறுகிறார்கள்.

மகளிர் உரிமைத் தொகையின் கீழ் மாத ரூபாய் 1000 அவர்களது வங்கி கணக்கில் அனுப்பி வைக்கப்படுகிறது.பெண்கள் வாழ்வில் முன்னேறும் வகையில் மகளிர் சுய உதவி குழு கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 2 லட்சம் மின் இணைப்பு கட்டணம் இல்லாமல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கிட்டத்தட்ட 26 லட்சம் பேர் தமிழ்நாடு முழுவதும் பயன் பெறுகிறார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கனவு திட்டமான கலைஞர் கனவு வீடு கட்டும் திட்டத்தின் மூலம் 3.5 லட்சத்தை முதலமைச்சர் அவர்கள் மாநில அரசு நிதியின் கீழ் கட்டித்தர உள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு விவசாயிகள் ஏழை, எளிய, சாமானிய பொதுமக்கள் நலன் கருதி அவர்களுக்குத் தேவையான அனைத்து திட்டங்களையும் என்றென்றும் சிறப்பாக செயல்படுத்தும் அரசாக திகழும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

நிகழ்வில் அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது.

நம்மை வழிகாட்டும் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும் முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைப்பதிலும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த மூன்று ஆண்டு காலமாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் ஆட்சி எல்லோருக்கும் எல்லாம் என்ற “திராவிட மாடல்” தத்துவத்தை முன்னிறுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு சமுதாயத்தைச் சார்ந்த தாய்மார்கள் வந்துள்ளீர்கள். உங்களுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவ வேண்டும் என்பது தான் முதலமைச்சர் அவர்களின் கருத்து. தமிழகத்தில் உள்ள மக்கள் ஒருவருக்கும் ஏதேனும் ஒரு நலத்திட்டம் வழங்கவேண்டும் என்ற குறிக்கோளோடு செயல்பட்டு வருகிறார். பட்டா மாற்ற பல நாள் அலைய வேண்டிய நிலை மாறி மக்களைத் தேடி வரும் நிலையாக மாறியுள்ளது.5 கோடி 35 லட்சத்தில் 46 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 1200 பேருக்கு இன்றைய தினம் நலத்திட்ட உதவிகள் பல்வேறு துறை சார்பில் வழங்கப்படுகிறது. ஊரக வளர்ச்சி துறை, வேளான் துறை என பல துறை சார்பில் ரூபாய் 3.16 கோடி மதிப்பில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.பல கட்டிடங்கள் திறக்கப்ப ட்டுள்ளது.ஒரே நாளில் 1200 பயனாளிகள் 33 கோடியே 58 லட்சம் மதிப்பில் நலத்திட்டங்கள் என பெரிய அளவில் உருவாக்கப்பட்டுள்ளது. குடிசை இல்லா தமிழகத்தை உருவாக்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. தமிழகம் முழுதும் கணக்கெடுக்கும் பணி தொடங்கியுள்ளன.அதற்காக ரூபாய் 3000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மக்கள் வீடுகள் புதுப்பிக்கவும் ரூபாய் 2000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.ஆக மொத்தம் ரூபாய் 5000,கோடி முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

வறுமை கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு தாயுமானவர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் காலை உணவு திட்டம் செயல்படுத்த தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். சமுதாயத்தில் எந்த நபராக இருந்தாலும் வேறுபாடுகளைத் தாண்டி ஆட்சியின் நல்ல திட்டங்கள் சென்று சேரும். நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்பட்ட கனமழை பெருவெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த பிரிவினையும் பாராது, தாயுள்ளத்தோடு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கியுள்ளார். மக்களின் துயரத்தில் பங்குபெறும் முதல்வராக உங்கள்வீட்டுபிள்ளையாக இருந்து வருகிறார்.இதனை மறவாது தமிழக முதல்வர் அவர்களுக்கு என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.

முன்னதாக கலை பண்பாட்டுத் துறை சார்பில் நெல்லை மாவட்டத்தில் 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளுக்கு மாவட்ட அளவில் சிறந்த 30 கலைஞர்களுக்கு கலை இளம்மணி,கலை வளர் மணி, கலைச்சுடர் மணி, கலை நன்மணி, கலை முதுமணி ஆகிய விருது களுடன்,ரூபாய் 3,30,000 மதிப்பிலான விருதுகளுக்கான பொற்கிழி பட்டயம் ஆகியவற்றை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,மீனவர் அணி துணைச் செயலாளர் எரிக் ஜூடு,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல். எஸ். லெட்சுமணன், ஆ.பிரபாகரன் சித்திக்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவஅய்யப்பன்,ஒன்றியச் செயலாளர்கள் சுடலைக்கண்ணு,

ஜோசப்பெல்சி, ராஜன், மண்டல தலைவர் பிரான்சிஸ், இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஜான் ரபீந்தர்,கருப்பசாமி கோட்டையப்பன், வழக்கறிஞரணி அமைப்பாளர் செல்வ சூடாமணி,இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான்மைதீன் மாமன்ற உறுப்பினர்கள் சுதாமூர்த்தி கோகுலவாணி,சகாய ஜூலியட், ராஜேஸ்வரி,மகளிர் அணி நிர்வாகிகள் ரேவதி அசோக்,ஹமிதா, மகளிர் திட்ட இயக்குனர் லக்குவன், சமூக பாதுகாப்பு திட்ட துணை ஆட்சியர் ஜெயா,உள்பட கழக நிர்வாகிகள்,பயனாளிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் திட்ட இயக்குனர் சுரேஷ் நன்றி உரையாற்றினார்.

---

திருப்பூர் தெற்கு மாவட்டம்

## உடுமலைப்பேட்டை மேற்கு, உடுமலைப்பேட்டை மத்திய ஆகிய ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில்

## திருத்தம்

தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனேநடைபெறவும்'முரசொலி'யில்வெளியிடப்பட்ட உடுமலைபேட்டை மேற்கு, உடுமலைபேட்டை மத்திய ஆகிய ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில்;

திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைபேட்டை மேற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **பெரியபாப்பனூத்து ஊராட்சி உடுமலைபேட்டை மத்திய ஒன்றியக் கழகத்தின் கீழும்**

உடுமலைபேட்டை மத்திய ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **கணபதிபாளையம் ஊராட்சி உடுமலைபேட்டை மேற்கு ஒன்றியக் கழகத்தின் கீழும்** இயங்கும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

# ஒரு கேள்வி; ஒரு பதில்!

**கேள்வி :** தி.மு.க. ஆட்சியில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் தமிழ்நாட்டில் சுதந்திரமாக இயங்கிவருவதாகக் குறிப்பிட்டு, அ.தி.மு.க. எடப்பாடி அணியினர் அவரது தலைமையில் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தியுள்ளனரே?

**பதில் : எடப்பாடி பழனிச்சாமிக்கு ‘செலக்டிவ் அம்னீஷியா’ என்பார்களே; அதாவது, தேர்ந்தெடுக்கப்பட்ட மறதி கொஞ்சம் அதிகம். தமிழ்நாட்டில் போதைப் பொருளை வைத்து அரசியல் நடத்தும் கூட்டம் – நடத்திய கூட்டம் அ.தி.மு.க. கூட்டம் என்பதை அதனால்தான் மறந்து விட்டார் போலும்!**



**2001 ஆம் ஆண்டில் எடப்பாடியின் தலைவி ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது – அவரது முன்னாள் வளர்ப்பு மகன் வீட்டிலிருந்து 89 கிராம் ஹெராயின் கைப்பற்றப் பட்டதே!**

**எம்.ஜி.ஆரின் தியாகராயர் நகர் நினைவு இல்ல அலுவலராகவும், அவரது மனைவி ஜானகி அம்மையாரின் நம்பிக்கைக்குரியவராகவும் விளங்கிய முத்து கஞ்சா வைத்திருந்ததாக சாட்சாத் அதே ஜெயலலிதா ஆட்சியில் கைது செய்யப்பட்டாரே!**

**ஒரு வழக்கில் ஜெயலலிதா குறித்து சில எதிர்கருத்து தெரிவித்த நீதிபதியின் மருமகனை ‘நார்கோடிக்ஸ்’ எனும் போதைப் பொருள் வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்டதும் அதே அம்மையார் ஜெயலலிதாவின் ஆட்சியில் அல்லவா?**

**அதே அம்மையார் ஆட்சியில் 2003 ஆம் ஆண்டு மதுரையைச் சேர்ந்த இளம் பெண் செரினா, அவரது தாயார் ரமீஜா மற்றும்**




**அவர்களது கார் ஓட்டுநர் சதீஷ் குமார் ஆகியோர் கைது செய்யப் படவில்லையா? செரினா வீட்டில் கிலோ கணக்கில் கஞ்சா இருந்ததாகக் கூறப்பட்டதே! இந்த செரீனா, ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரி சசிகலாவின் கணவரான நடராசனின் நட்பு வட்டாரத்தில் வலம் வந்தவர் என்றும்; மேலும் பல பரபரப்பான தகவல்களோடு அப்போதைய ஏடுகளில் செய்திகள் பல நாட்கள் வந்தனவே!**

– இவை எல்லாமே அன்று அ.தி.மு.க.வின் முக்கியப் புள்ளியின் நெருங்கிய வட்டாரங்களில் தொடர்புடையவர்களிடமிருந்து பிடிபட்டதாகக் கூறப்பட்டவை!

அதற்கான காரணங்களை மீண்டும் கிளறினால் அ.தி.மு.க. நடத்திய சாக்கடை அரசியலின் முடை நாற்றம் மீண்டும் கிளம்புமே; இவற்றை எல்லாம் மறந்து போராட்டம் நடத்தியுள்ளார் எடப்பாடி!

இன்று தமிழ்நாட்டில் மனிதச் சங்கிலி நடத்தும் இந்தப் பழனிச்சாமி, ஆட்சி பரிபாலனம் புரிந்த 2019 – 20 ஆம் ஆண்டுகளில் அதிக அளவில் போதை மருந்துகள் பிடிபட்ட நான்கு மாநிலங்களில் இவர் முதலமைச்சராக விளங்கிய தமிழ்நாடும் அடங்கும் என்கிற தகவலை DRI அதாவது DIRECTORATE OF REVENUE INTELLIGENCE அதாவது வருவாய் புலனாய்வு இயக்குநரகம் அப்போதே தெரிவித்துள்ளது. அது ‘தி இந்து’ போன்ற ஏடுகளில் அப்போதே வெளிவந்துள்ளது.

**இந்த லட்சணத்தில் மக்கள் மறதியில் குளிர் காய நினைத்துள்ளார் எடப்பாடி; அவரை நினைக்கும்போது கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல்லெறியும் பைத்தியக்காரர்களும், அண்ணாந்து படுத்துக் கொண்டு அடுத்தவர் மேல் எச்சில் உமிழ நினைக்கும் அடிமுட்டாள்களும்தான் நினைவுக்கு வருகின்றனர்!**

---




தருமபுரியில் இருந்து வத்தல் மலைப்பகுதிக்கான முதல் மகளிர் கட்டணமில்லா பேருந்தினை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.அதுல் ஆனந்த் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.டி என் வி.எஸ்.செந்தில்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, நகரச் செயலாளர் நாட்டான் மாது, நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது, வருவாய் அலுவலர் பிரின்சி பால் ராஜ்குமார், போக்குவரத்து மண்டல பொது மேலாளர் செல்வம், தருமபுரி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கே.பி.சக்திவேல் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.3.2024) முகாம் அலுவலகத்தில், ஜெர்மனியில் நடைபெற்ற சமையல் கலைத் திறனுக்கான ஒலிம்பிக் – 2024 போட்டியில் (Culinary Olympics) இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் வென்ற சென்னையைச் சேர்ந்த மாணவி ஸ்ரேயா அனீஸ் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சென்னை அமிர்தாஸ் ஹோட்டல் மேனேஜ்மென்ட் தலைவர் பூமிநாதன், தலைமைச் செயல் அலுவலர் திருமதி கவிதா மற்றும் சமையல் கலை நிபுணர் கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.

நீலகிரி மாவட்டம் – உதகை நகரம் கிழக்கு கிராமத்தில்

# மண் சரிந்து உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 15 -

நீலகிரி மாவட்டம், உதகையில் மண் சரிந்து உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல், நிதியுதவி அளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு :-

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், உதகை நகரம் கிழக்கு கிராமம், பாபுஷா லைன் பகுதியில் 13.03.2024 அன்று முற்பகல் தனியாருக்குச் சொந்தமான கட்டுமானப் பணியின் போது எதிர்பாராத விதமாக மண் சரிந்து இருவர் சிக்கிய விபத்தில் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ரிஸ்வான் (வயது 22) என்பவர் மீட்கப்பட்டு உதகை தலைமை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன். உயிரிழந்தவரின் உடலை தமிழ்நாடு அரசின் சார்பாக அவரது சொந்த ஊருக்கு அனுப்பிவைக்க மாவட்ட ஆட்சியரை உரிய ஏற்பாடுகள் செய்யவும் அறிவுறுத்தியுள்ளேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து உதகை தலைமை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த சகிர் (வயது 25) என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும் பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட வும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்களின் அறிவிப்பு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

டாடா மோட்டார்ஸ் நிறுவனம் ரூ.9000 கோடி முதலீடு! இந்தியாவின்

# தன்னிகரற்ற ஆட்டோமொபைல்ஸ் தலைநகர் தமிழ்நாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, மார்ச் 15 -**

**டாடா மோட்டார்ஸ் நிறுவனம் ரூ.9000 கோடி முதலீடு செய்வதையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளத்தில் "இந்தியாவின் தன்னிகரற்ற ஆட்டோமொபைல்ஸ் நகராக தமிழ்நாடு தனது நிலையை மென்மேலும் உறுதிப் படுத்துகிறது" என்று கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவரது வலைதளப் பதிவு வருமாறு :-

டாடா மோட்டார்ஸ் நிறுவனம் 9000 கோடி ரூபாய் முதலீட்டில் 5000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய வகையில் வாகன உற்பத்தி தொழிற்சாலையை நிறுவிடத் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இது மிக முக்கியமான நகர்வாகும்.

இந்த முதலீட்டால் இந்தியாவின் தன்னிகரற்ற ஆட்டோமொபைல் தலைநகராக தமிழ்நாடு தனது நிலையை மென்மேலும் உறுதிப்படுத்துகிறது. தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஹுண்டாய் நிறுவனம் தமிழ்நாட்டில் முதலீடு மேற்கொண்டதால் ஏற்பட்ட தாக்கத்தை இது நினைவூட்டுகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

3000 பேர் வேலை வாய்ப்பு பெறுவர்

# நீலகிரி மாவட்டத்தில் விரைவில் தொழிற்பூங்கா திறப்பு!

## புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேச்சு!

நீலகிரி, மார்ச் 15 –

நீலகிரி மாவட்டத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் நலத் திட்டங்கள் குறித்த சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் திறந்து வைத்து பார்வையிட்டு, 50 பயனாளிகளுக்கு ரூ.1.42 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையவளாகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் நலத் திட்டங்கள் குறித்த சிறப்பு புகைப்பட கண்காட்சியினை, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்தி ரன் திறந்து வைத்து பார்வையிட்டு, தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், கூட்டுறவுத்துறை, மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வருவாய் மற்றும்பேரிடர் மேலாண்மைத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், மாவட்ட தொழில் மையம், தோட்டக்கலைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில்

50 பயனாளிகளுக்கு ரூ.1.42 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும், சுற்றுலாத்துறை அமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட இந்த சிறப்பு புகைப்படக் கண்காட்சியில் மகளிர் திட்டம், சமூக நலத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, வனத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், இசேவை மையம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து கண்காட்சியில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு ஆட்சி பொறுப்பேற்றது முதல் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, மகளிர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் புதுமைப் பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் ஆகிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதேபோல், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் மூலம் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் இல்லங்களுக்க சென்று, மருந்து பெட்டகங்கள் வழங்கப் பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள மக்களுக்கு உயர்சிகிச்சை வழங்கும் வகையில் உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டுமான பணிகள் இறுதிகட்டத்தை எட்டியுள்ளது.

கட்டுமான பணிகள் நிறைவடைந்து, விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது. உதகை தலைமை மருத்துவமனையை கூடலூர் வட்டத்திற்கு மாற்றப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு



திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல குன்னூர் மற்றும் கோத்தகிரி அரசு மருத்துவமனைகளும் புணரமைப்பு செய்யப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், கூட்டுறவுத் துறையின் சார்பில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் நியாய விலைக்கடைகள் மூலம் தரமான பொருட்கள் வழங்கப்படுகிறது. சுகாதாரத் துறையின் சார்பில், இன்னுயிர்காப்போம் நம்மைக்காக்கும் 48 திட்டத்தின் மூலம் விபத்தில் சிக்கிய பல்வேறு நபர்கள் பயன்பெற்றுள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் இருக்கும் இடத்திற்கே அரசு அலுவலர்கள் தங்கி, அவர்களின் குறைகளை கேட்டறிந்து, தீர்வு காண வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின்கீழ், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட வட்டத்தை தேர்ந்தெடுத்து, அரசின் நலத்திட்டங்கள், வளர்ச்சிப்பணிகள் குறித்து நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, அங்குள்ள பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து, நிவர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், நமது மாவட்டத்தில், பல்வேறு அரசு பேருந்துகள் சீரமைக்கப்பட்டு, நல்ல நிலையில் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விடியல் திட்டத்தின்கீழ், 118 பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் அதிகமான மகளிர்கள் பயன் பெற்று வருகிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் 1.12 இலட்சத்திற்கும் மேற்பட்ட மகளிர்கள் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெற்று வருகின்றனர். நமது மாவட்டத்தில் 2500 முதல் 3000 நபர்கள் வரை வேலைவாய்ப்பு பெறும் வகையில் தொழிற்பூங்கா அமைக்கப்படவுள்ளது.

மேலும், நமது மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் சாலை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. இப்புகைப்படக் கண்காட்சியில், முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டங்களான, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின்கீழ் அளிக்கும் சிகிச்சை, மக்களை தேடி மருத்துவம், உங்களை தேடி உங்கள் ஊரில், நீங்கள் நலமா, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், பன்னாட்டு நிறுவனங் களுடன் புதிய தொழில் தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குதல், மகளிர் சுயஉதவிக் குழுவினர்களுக்கு கடனுதவிகள் வழங்கியது, ஊட்டச்சத்து உறுதி செய், முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டம் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம், கலைஞரின் வரும் முன்காப்போம் திட்டம், நமக்கு நாமே திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து புகைப்படங்கள் சிறப்பாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் சாதனைகள் மற்றும் தமிழ்நாடு அரசால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து அனைத்து தரப்பட்டவர்களும் அறிந்து கொள்ளும் வகையிலும், விழிப்புணர்வு களை ஏற்படுத்தும் வகையிலும் இன்று முதல் தொடர்ந்து ஏழு நாட்கள் இந்த சிறப்பு புகைப்பட கண்காட்சி நடைபெறுகிறது.

நீலகிரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அதிகளவில் பார்வையிட்டு, அரசின் நலத் திட்ட உதவிகளை தெரிந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமசந்திரன் தெரிவித்தார்

முன்னதாக, சுற்றுலாத் துறை அமைச்சர், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு விளம்பர வாகனத்தின் மூலம் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் விளக்கும் வகையில் திரை யிடப்பட்ட குறும்படத்தினை பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் கலை பண்பாட்டுத்துறையின் சார்பில், ஜவஹர் சிறுவர் மன்ற குழந்தைகளின் வரவேற்பு நடன நிகழ்ச்சியினை பார்வையிட்டார்

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கல்பனா, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) காசிநாதன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் சண்முகசிவா, உதகை நகராட்சித்தலைவர் திருமதி.வாணீஷ்வரி, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.பிரவீணா தேவி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கீதா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் திருமதி. தேவகுமாரி, உதகை ஊராட்சி ஒன்றியத்தலைவ மாயன் (எ) மாதன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சையத் முகம்மத், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) சரண், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் (பொ) திருமதி.ஷோபனா, உதகை வட்டாட்சியர் சரவணகுமா திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நாள்தோறும் பல மணி நேரம் உழைத்துக் கொண்டிருக்கும்

# தாய்மார்களுக்கு ரூ.1000 வழங்குவதைக் கொச்சைப்படுத்துவதா?

## கழக மகளிர் அணி கண்டனம்!

*சென்னை, மார்ச் 15 -*

*தாய்மார்களுக்கு 1000 ரூபாய் பிச்சைப் போட்டா வாக்கு அளித்து விடுவார்களா என்று மகளிர் உரிமைத்தொகையை இழிவுப் படுத்தி பேசிய குஷ்புவுக்கு தி.மு.க. மகளிர் அணி, தி.மு.க. மகளிர் தொண்டர் அணி கண்டனம் தெரிவித்துள்ளது.*

*இது குறித்து மகளிர் அணிச் செயலாளர் ஜெ.ஹெலன்டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப. இராணி ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*ஒவ்வொரு பெண்ணும் ஆணின் வெற்றிக்காகவும் அவரவர் குழந்தைகளின் கல்வி, உடல் நலம் காக்கவும் இந்த சமூகத்திற்காகவும், வீட்டிலும் வெளியிலும் ஒரு நாளைக்கு பலமணி நேரம் பெண்கள் உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். பெண்களின் உழைப்பை முறையாக அங்கீகரித்திடவே பெண்களுக்கு திராவிட முன்னேற்ற கழக அரசு சொத்துரிமை வழங்கி, கல்வியிலும், வேலை வாய்ப்பிலும், உள்ளாட்சி அமைப்புகளிலும் இட ஒதுக்கீடு அளித்து பெண் உரிமை போற்றிட கலைஞர் அவர்களின் பெயரால் மகளிர் உரிமைத் தொகை திட்டம் ரூபாய் 1000 கடந்த வருடம் செப்டம்பர் மாதம் மூலம் தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 18 இலட்சம் மகளிருக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவேதான் இத்திட்டத்திற்கு மகளிருக்கான உதவித்தொகை என்று இல்லாமல் மகளிர் உரிமைதொகை என்று பெயரிட்டு வழங்கப் படுகிறது.*

*எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மாதம்தோறும் வழங்கப்படும் கலைஞர் உரிமை தொகையை தாய்மார்க்கு 1000 பிச்சை போட்டா வாக்கு அளித்து விடுவார்களா என்று பிச்சைகாரர்களுக்கு ஒப்பிட்டு தமிழக மகளிர்களை அவமதிக்கும் வகையில் பேசியிருக்கும் பா.ஜ.க. மத்திய செயற்குழு உறுப்பினர் குஷ்புவுக்கு மகளிர் உரிமைத் தொகை எத்தனை தாய்மார்களுக்கு வீட்டுச் செலவு, வீட்டு வாடகை, மருத்துவச்செலவு என்று பயன்படுகிறது தெரியுமா? தமிழக மகளிரை இழிவு படுத்தி பேசிய குஷ்புவை திமுக மகளிர் அணி தி.மு.க. மகளிர் தொண்டர் அணி வன்மையாக கண்டிக்கிறது. தமிழக மகளிர்கள் பாராளுமன்ற தேர்தலிலே தி.மு.க.வுக்கு ஆதரவு வாக்குகள் அளித்து தமிழகத்திலிருந்து பி.ஜே.பி.யை விரட்டி அடித்து பாடம் புகட்டுவார்கள்.*

*இவ்வாறு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளன.*

திருப்பணி நிதியை ரூ.2.50 லட்சமாக உயர்த்திய முதல்வருக்கு நன்றி!

# நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு வாக்கு சேகரிப்பு!

## பூசாரிகள் நலச்சங்க மாநாட்டில் தீர்மானம்! பி.வாசு அறிக்கை!

சேலம், மார்ச் 15 –

சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்கத்தின் சேலம் மாவட்ட சிறப்பு மாநாடு மற்றும் கோவில் பூசாரிகள் நலச் சங்கத்தின் 19 ஆம் ஆண்டு விழா 13.3.2024 புதன்கிழமை காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை சேலம் நகர், வாசவி மஹாலில் விமரிசையாக நடைபெற்றது. கோவில் பூசாரிகள் நலச் சங்கத்தின் மாநிலத் தலைவரும் பூசாரிகள் ஓய்வூதிய தேர்வுக் குழு உறுப்பினருமான பி.வாசு பூசாரி மாநாட்டிற்குத் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் ஆண்டுக்கு 2500 திருக்கோவில்களுக்கு திருப்பணி நிதி ரூ. 2 லட்சம் வீதம் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆன்மீக மாடல் அரசு வழங்கி வருகிறது. ஆனால் இந்த திருப்பணி நிதிக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு 18 சதவீதம் ஜி.எஸ்.டி வரி பிடித்தம் செய்து விடுகிறது. அதாவது ரூ. 2 லட்சத்தில் ரூ. 39 ஆயிரத்தை ஒன்றிய அரசு ஜி.எஸ்.டி வரி என்ற பெயரில் பிடித்துக் கொள்கிறது.

இந்த இக்கட்டான நிலைக்குத் தீர்வு காண ஏதேனும் ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களுக்கு சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்கம் கோரிக்கை விடுத்து வந்தது. சங்கத்தின் கோரிக்கையின் அடிப்படையில் திருப்பணி நிதியை ரூ.2.50 லட்சம் ஆக உயர்த்தி முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள அரசாணை வரவேற்கத்தக்கது

உண்மையான உயர்வான திராவிட மாடல் ஆன்மீக அரசை நடத்தி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு கோவில் பூசாரிகள் நலச் சங்கம் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு கிராம கோவில் பூசாரிகளுக்கு அரும்பெரும் உதவிகளைச் செய்து வரும் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கும் அதன் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கும் கோவில் பூசாரிகள் நலச் சங்கம் எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பரிபூரண ஆதரவளிக்க முடிவு செய்துள்ளது.



திராவிட மாடல் நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட இளைஞரணி சார்பில் ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் ஜி.பி.ராஜா, இன்பாரகு, தலைமையில் கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், வ. வேலுசாமி, பெ. குழந்தை வேலு, மா.ஜெயராம், ஏ.ஆர்.சௌந்தர்ராஜன், சி.ஐயப்பன் ஆகியோர் முன்னிலையில் மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் தனச்செல்வம், மா.ஒச்சு பாலு, சின்னம்மாள், இளைஞர் அணி நிர்வாகிகள் அன்பு செல்வம், தினேஷ்குமார், தமிழ் சந்திரன், ராம்ப்ரசாத், ராஜபாண்டி, சுந்தரேஸ்வரன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் , பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கோவை தெற்கு மாவட்டம்

# மதுக்கரை ஒன்றியம், ஒத்தக்கால்மண்டபம் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

*கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், ஒத்தக்கால்மண்டபம் பேரூர்க் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற* **ஆர்.கார்த்திகேயன்** *(68, பன்னீர் செல்வம் வீதி தெற்கு, ஒத்தக்கால்மண்டம், கோவை மாவட்டம் - 641 032) அவர்கள் ஒத்தக்கால்மண்டபம் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப் படுகிறார்.*

*ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தோழர் சாரங்கபாணி
## மார்ச் 15 (1965)



**மாயவரம் ஏ.வி.சி. கல்லூரியில் பயிலும் மாணவரான இவர், 1965ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாள் அன்று காலை கல்லூரிக்கு வந்து யாரும் காணாதபடி கல்லூரித் திடலில் தன்மீது மண்ணெண்ணை ஊற்றித் தீயிட்டுக் கொண்டு, "இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!" என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்த போது, அவரது முழக்கத்தை கேட்ட மாணவர்கள் தீயை அணைக்க முயன்று தோல்வியுற்றனர். குற்றுயிராக உள்ள சாரங்கபாணி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். அங்கு "தமிழ்த் தாய்க்கு என் உயிரைத் தந்துவிட்டேன்" என்று கூறி முடிக்கவும் உயிர் பிரிந்தது.**

**சாரங்கபாணி மாணவர் நடத்திய இந்தி எதிர்ப்பு ஊர்வலங்களை முன்னின்று நடத்தியவர். மாயவரம் ரெயில் நிலைய அறப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1 லட்சம் பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கியதை தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் கே.டி.எம் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் திருச்செந்தூர் வட்டாரங்களைச் சேர்ந்த 751 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர் ராதா கிருஷ்ணன் வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் திருமதி அ.பிரம்மசக்தி, திருச்செந்தூர் நகர்மன்ற தலைவர் திருமதி சிவ ஆனந்தி, திருச்செந்தூர் நகர மன்ற துணைத் தலைவர் ஏ.பி. ரமேஷ் ,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், திருச்செந்தூர் நகரச் செயலாளர் வால்சுடலை, மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன், திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் ம.பிரபு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தமிழக முதல்வர் தளபதி பிறந்த நாளை முன்னிட்டு அரசு மருத்துவமனையில் பிறந்த இரண்டு குழந்தைகளுக்கு சமூக ஆர்வலர் செந்தில்நாதன் ஏற்பாட்டின் பேரில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் 2கிராம் தங்கமோதிரத்தை அணிவித்தார்.இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. ஒன்றிய செயலாளர்கள் சுப.சின்னத்துரை,கே.ஆர்.ஆனந்த்,காரைக்குடி நகர் கழக செயலாளர் என்.குணசேகரன் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி,திருமதி.கலாகாசிநாதன்உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம்

# ரெட்டியார் பட்டியில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கும் பணி!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு - அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு!

### இரா.ஆவுடையப்பன்-டி.பி.எம்.மைதீன்கான் - ஞானதிரவியம் - மு.அப்துல் வகாப் பங்கேற்பு!

நெல்லை, மார்ச் 15-

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம் குலவணிகர் கிராமம் ரெட்டியார்பட்டி மழை அடிவாரத்தில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ஞான திரவியம்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் மாநகராட்சி மேயர் சரவணன், மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 09.09. 2021 அன்று விதி 110 ன் கீழ் ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் போது கிடைத்த அரிய பொருட்களை அழகுற காட்சிப்படுத்தும் விதமாக நெல்லை நகரில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்படும் என அறிவித்து ஆணை வெளியிட்டார்கள். நெல்லை மாவட்டம் குலவணிகர்புரம் கிராமம் ரெட்டியார்பட்டி மலை அடிவாரத்தில் 13.2 ஏக்கர் நிலப் பரப்பில் அருங்காட்சியகம் அமைக்க ரூபாய் 15.02 கோடியினை வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்தும் ரூபாய் 18 கோடி மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்தும் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.அருங்காட்சியகத்தின் கட்டடத் தொகுதிகளின் வடிவமைப்பு இப்பகுதி மக்களின் கலாச்சார வாழ்க்கை முறையை பிரதிபலிக்கும் வகையில் உள்ளூர் வீடுகளின் கலைநயத்தை பறைசாற்றும் விதமாக முற்றங்கள், தாழ்வாரங்கள், மரம், கல்தூண்கள் போன்றவை கொண்ட பிராந்தியத்தின் உள்நாட்டு கட்டடக்கலைத் தன்மையை உள்ளடக்கி வடிவமைக்கப்பட வுள்ளது.

தமிழகத்தின் தொன்மையான வரலாற்றினை உலகறிய செய்யும் பொருட்டு கொற்கை,ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய இடங்களில் கிடைத்த தொல் பொருள்களை காட்சிப்படுத்துவதற்காக நெல்லை மாவட்டம் குலவணிகர் கிராமத்தில் ரூபாய் 33.02 கோடி மதிப்பீட்டு செலவில் அருங்காட்சியகம் அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு 18 .05.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து இப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த அருங்காட்சியகத்தில் நிர்வாக தொகுதி தரைத்தளம் 5556 சதுர அடி முதல் தளம் 5393 சதுர அடி,சிவகளை கட்டிட தொகுதி தரைத்தளம் 6068 சதுர அடி,முதல் தளம் 2923 சதுர அடி, ஆதிச்சநல்லூர் கட்டடத் தொகுதி ஏ. தரைத்தளம் 5097 சதுர அடி,முதல் தளம் 4271 சதுர அடி,ஆதிச்சநல்லூர் கட்டடத் தொகுதி பி.தரைத்தளம் 3509 சதுர அடி,முதல் தளம் 3509 சதுர அடி கொற்கை கட்டடத் தொகுதி ஏ. தரைத்தளம் 7624 சதுர அடி,முதல் தளம் 5238 சதுர அடி,கொற்கை கட்டடத் தொகுதி பி.தரைத்தளம் 2420 சதுர அடி,முதல் தளம் 2147 சதுர அடி, கைவினைப் பொருட்கள் பணிமனை தரைத்தளம் மட்டும் 430 சதுர அடி என மொத்தம் 54,296 சதுர அடி பரப்பில் பொருநை அருங்காட்சியகம் அமைத்து காட்சிப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.பண்டை தமிழரின் வாழ்வியல் பயன்படுத்திய பொருட்கள், கடல் வணிகம், போன்றவற்றை போற்றும் பல ஆதாரங்கள் கொற்கை, ஆதிச்சநல்லூர், சிவகளையில் கண்டறியப்பட்டுள்ளது. பொருநை அருங்காட்சியகம் கட்டடப்பணி 26.06. 2023 அன்று தொடங்கப்பட்டது. இக்கட்டடப் பணிகள் வரும் பொங்கலுக்குள் முடிக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. பொருநை அருங்காட்சியத்திற்கு சங்ககால தாவரங்கள்,மரங்கள் நட்டு பராமரிக்கவும்,பூங்காக்கள்,பேட்டரி வாகன வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளது. அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.

முன்னதாக பாளையங்கோட்டை மாவட்ட மைய நூலகத்தில் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் விஜிலா சத்யானந்தத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 20 லட்சம் மதிப்பில் போட்டி தேர்வுகளுக்கான பயிற்சி அரங்கத்தினை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் தலைமையில் திறந்து வைத்தனர்.

இந்த ஆய்வு நிகழ்வில் கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய தலைவர் விஜிலா சத்யானந்த்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா,மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மீனவர் அணி துணை செயலாளர் எரிக்ஜூடு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன்,சித்திக், ஒன்றிய செயலாளர்கள் ஜோசப்பெல்சி, ராஜன்,சுடலைக்கண்ணு, இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஜான் ரபீந்தர்,கருப்பசாமி கோட்டையப்பன் வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி, இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன்,மகளிர் அணி நிர்வாகிகள் ரேவதி அசோக், ஜூலியட், உள்பட அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.

### அனைவரும் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில்

# பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை முதல்வர் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!



புதுக்கோட்டை, மார்ச் 15-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கீரணிப்பட்டியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், 30 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகளையும் மற்றும் அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், 724 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளையும், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 11.03.2024 அன்று வழங்கினார்கள். பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏழை, எளிய பொதுமக்களும் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்தவகையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், 30 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, திருமயம் வட்டத்தைச் சேர்ந்த 30 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு பேருதவியாக இருந்து வருகிறார்கள்.

மேலும் கழனிவாசல், கல்லூர், கீழாநிலைக்கோட்டை பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு கழனிவாசல் அரசு மேல்நிலைப் பள்ளியிலும் மற்றும் அரிமளம் (ஆண்கள்), அரிமளம் (பெண்கள்), தாஞ்சூர், உலகப்பர் பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு அரிமளம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் இருந்து விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது. அதன்படி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கழனிவாசல் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 61 மாணவர்களுக்கும், 69 மாணவிகளுக்கும் மற்றும் கல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 43 மாணவர்களுக்கும், 20 மாணவிகளுக்கும் மற்றும் கீழாநிலைக் கோட்டை, அய்யாக்கண்ணு அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 41 மாணவர்களுக்கும், 42 மாணவிகளுக்கும் மற்றும் அரிமளம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 111 மாணவர்களுக்கும், 62 மாணவிகளுக்கும் மற்றும் அரிமளம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 64 மாணவிகளுக்கும் மற்றும் தாஞ்சூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 23 மாணவர்களுக்கும், 23 மாணவிகளுக்கும் மற்றும் ராயவரம், உலகப்பர் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 52 மாணவர்களுக்கும், 113 மாணவிகளுக்கும் என மொத்தம் 724 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், பா.ஐஸ்வர்யா, ராஜேஸ்வரி, மேகலாமுத்து, மாரிக்கண்ணு முத்துக்குமார், பொன்.இராமலிங்கம், கலைவாணி சுப்பிரமணியன், புவியரசன், வி.ஆர்.இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### நா.கார்த்திக் - தொ.அ. ரவி - தளபதி இளங்கோ பங்கேற்பு !

# கழக சட்டத்துறை சார்பில் கோவை மாநகர் மாவட்டத்தில் ‘WAR ROOM’!

## என்.ஆர்.இளங்கோ எம்.பி.திறந்து வைக்கிறார்! அன்புச் செழியன் வேண்டுகோள்!

கோவை, மார்ச் 15-

கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்புச் செழியன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு;

திராவிட முன்னேற்றக் கழக சட்டத்துறையின் சார்பாக வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிக்கும் தி.மு. கழக வழக்கறிஞர் அணியின் மூலம் WAR ROOM என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் தேர்தல் சம்பந்தமான அனுமதிகள் புகார்கள், விசாரணைகள் போன்றவற்றிற்கு உதவிகரமாக கழக வழக்கறிஞர்கள் சிறப்பான முறையில் பணி புரிய உள்ளார்கள்.

மேற்படி WAR ROOM கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் கோவை க்ராஸ்கட் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் (இன்று 15.3.2024 வெள்ளிக்கிழமை ) முற்பகல் 11.30 மணிக்கு கழக சட்டத்துறை செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் கோவை மாவட்ட ஒருங்கிணைந்த மாவட்ட கழக செயலாளர்கள் நா. கார்த்திக்,தொ.அ.ரவி, தளபதி இளங்கோ, சட்டத்துறை இணைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர்கள் கே.எம். தண்டபாணி பி.ஆர். அருள்மொழி மா.சு.ராதாகிருஷ்ணன் தலைமைக் கழக வழக்கறிஞர் கே. ஜே.சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

இந்த சிறப்புமிக்க நிகழ்வில் நமது கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்புச் செழியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### அரசு ஊழியர் - ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு!

# 16 லட்சம் குடும்பங்களை முதல்வர் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளார்!

## தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் பாராட்டு - கு.தியாகராஜன் அறிக்கை!

சென்னை, மார்ச் 15-

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி 46 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக உயர்த்தி அறிவித்த தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் நன்றி தெரிவித்தார்.

இதுகுறித்து கு.தியாகராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :

எப்பொழுதெல்லாம் திராவிட முன்னேற்ற கழக ஆட்சி ஏற்படுத்துகிறதோ அப்பொழுதெல்லாம் அரசு ஊழியர் ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றுவது வழக்கம். முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற காலம் கொரோனா பேரிடர் நிதி நெருக்கடி மிகுதியாக இருந்த காலம் அப்போது கடந்த ஆட்சியில் அரசு ஊழியர் ஆசிரியர்களின் அகவிலைப்படி உயர்வு மற்றும் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு போன்றவை முடக்கி வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு முடக்கி வைக்கப்பட்டிருந்த அகவிலைப்படி உயர்வை11 சதவீதம் மட்டுமே உயர்த்துவார் என்று அனைவரும் எதிர்பார்த்து இருந்து காத்திருந்த நிலையில் 14 சதவீத ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இணையாக உயர்த்தி வழங்கி அரசு ஊழியர், ஆசிரியர், ஓய்வூதியக்காரர்களை இன்பக் கடலில் ஆழ்த்தினார்.

அதன் பிறகு ஒன்றிய அரசு அறிவித்த ஆறு மாத கால இடைவெளிக்குப் பிறகு மாநில அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அறிவித்து வரும் சூழல் நிலவி வந்தது. இதனால் மிகுந்த நிதி இழப்பு, ஆசிரியர், அரசு ஊழியர் ஓய்வுதியதாரர்களுக்கு ஏற்பட்டதை முதலமைச்சர் அவர்களே நேரடியாக சந்தித்து தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றச் சங்கம் அவரின் கவனத்திற்கு கொண்டு சென்றது.

கனிவோடு பரிசீலித்த முதலமைச்சர் அவர்கள் அதன் தொடர்ச்சியாக இனி வரும் காலங்களில் ஒன்றிய அரசு எப்போதெல்லாம் அகவிலைப்படி உயர்வை உயர்த்தி அறிவிக்கிறதோ அப்பொழுதே உடனடியாக மாநில அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்திருந்தார்.

தற்போது ஒன்றிய அரசு ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு நான்கு சதவீத அகவிலைப்படி உயர்வை உயர்த்தி நேற்று அறிவிப்பு வெளியிட்டது.

அதன் தொடர்ச்சியாக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு 4% அகவிலைப்படி உயர்வை அறிவித்திருக்கிறார்.

இதனால் 16 லட்சம் ஆசிரியர், அரசு ஊழியர், ஓய்வூதியதாரர்கள் குடும்பங்கள் பயனடைய உள்ளார்கள்.

அவர்களின் குடும்பங்களில் மகிழ்ச்சியை முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி உள்ளார்.

இதிலிருந்து என்றென்றைக்கும் ஆசிரியர் அரசு ஊழியர்களின் பாதுகாவலனாக இருப்பது திமுக அரசு தான் என்பது மீண்டும் நிரூபணம் ஆகி உள்ளது.

இவ்வாறு கு.தியாகராஜன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.




மகளிர் உரிமைத் தொகையை இழிவாக பேசிய பி.ஜே.பி. குஷ்புவைக் கண்டித்து தேனி வடக்கு மாவட்டம் மகளிர்அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பாக வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சரவணகுமார் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பவானி, மகளிர் துணை அமைப்பாளர்கள் மாலா, ஜெரினா பேகம், மணிமேகலை, கலையரசி, அனுசுயா, இந்துமதி, நகரச் செயலாளர் நாராயண பாண்டியன் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர,பேரூர், செயலாளர்கள் மற்றும் அனைத்துக் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம், வீரவநல்லூர் பேரூரைச் சேர்ந்த எம்.அப்துல்ரகுமான் அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஜே.எஸ். இராசு

**மார்ச் 15 (2000)**



கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டவர். ஆரம்பக் காலத்தில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகவும் பணிபுரிந்தவர்.

கழக இதழ்களில் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கியவர். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

தமிழக சட்டப்பேரவைக்கு பெரம்பலூர் தொகுதியிலிருந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் சட்டமன்ற மேலவை, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

“பெரம்பலூர் பகுதியில் ஆதிதிராவிட சமுதாயத்தில் தோன்றிய இராசு கழகத்தை வளர்த்திட அரும்பாடுபட்டவர். தெளிவான சிந்தனையாளர். தேனருவியெனப் பேசும் சொற்பொழிவாளர். தி.மு.கழகத்தின் மாசுமருவற்ற செயல்வீரர்” எனத் தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


TIRUPPUR CITY MUNICIPAL CORPORATION
திருப்பூர் மாநகராட்சிக்கு ரூ.75 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டிடம்
அமைப்பதற்கும், பெருமாநல்லூர் சாலையில் நல்லாற்றில் ரூ.11.50 கோடி மதிப்பீட்டில்
பாலங்கள் கட்டுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்த கழகத்தலைவர்,
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!
மாண்புமிகு. கே.என்.நேரு
கழக முதன்மைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர்
மாண்புமிகு. மு.பெ.சாமிநாதன்
தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்
மாண்புமிகு. என்.கயல்விழிசெல்வராஜ்
ஆதித்திராவிடர் நலத்துறை அமைச்சர்
கழக மகளிர் அணி துணைச் செயலாளர்
உயர்திரு. க.செல்வராஜ் MLA
திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர்
திருப்பூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர்
திரு. டி.கே.டி.மு.நாகராசன்
திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர்
மாண்புமிகு. ந.தினேஷ்குமார் MIB
மேயர் - திருப்பூர் மாநகராட்சி
திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர்

## சமையல்காரரின் மகள் சமைக்கும் நீதி!



கல்வி ஒன்றே அழியாத செல்வம், என்ற வள்ளுவரின் வாய்மொழி எத்தனை உண்மை என்பதை சமீபத்தில், உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற நிகழ்வொன்று உணர்த்தியுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் சமையல்காரராகப் பணிபுரிந்து வருபவர் அஜய்குமார் சமல். இவருடைய மகள் பிரக்கியா, சட்ட மேற்படிப்பு படிப்பதற்காக அமெரிக்காவில் உள்ள இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு உதவித்தொகையோடு தகுதி பெற்றுள்ளார்.

சமீபத்தில் அமெரிக்காவில் இரண்டு பல்கலைக் கழகங்களில் முதுகலைச் சட்டம் பயில பிரக்கியாவுக்கு அழைப்பு வந்த நிலையில், தற்போது அமெரிக்காவில் முதுகலைச் சட்டம் பயில்வதற்கான உதவித் தொகையையும் பெற்றுள்ளார்.

இதையறிந்து உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட் உள்ளிட்ட நீதிபதிகள், மாணவியை நேரில் அழைத்து, புத்தகம் கொடுத்து ‘எங்கள் அனைவருக்கும் பெருமையாக உள்ளது’ என்று பாராட்டியும் இருக்கிறார்கள். மாணவியின் பெற்றோருக்குப் பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தார்கள். எந்தத் தடைகளையும் தாண்டுவதற்கு கல்வி சிறந்த ஆயுதம் என்பதை நிரூபித்திருக்கிறார் பிரக்கியா. ஊர்க் குருவிகள் பருந்தாகும் காலமிது!

## ஃப்ளாஷ்பேக்



ஹெச்.ஹிதாயத்துல்லாஹ்



### வழக்கு நிதி!

1977-ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று தந்தை பெரியார் அவர்களது பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் மல்லிப்பட்டினம் கிளைக் கழகத்தில் உள்ள கள்ளிவயல் தோட்டத்தில் கழகக் கொடியேற்று விழா நடைபெற்றது. அந்த நிகழ்வில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பங்கேற்றுக் கொடியேற்றினார். அப்போது, என்னுடைய சித்தப்பா மா.மு.முகமது மீராசா அவர்கள் கட்சி நிதியும், மிசா வழக்கு நிதியும் தலைவர் அவர்களிடம் வழங்கினார். அப்படியான சூழலில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**–ஹெச்.ஹிதாயத்துல்லாஹ், முன்னாள் ஒன்றிய பிரதிநிதி, மல்லிப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தொழிற்சங்கப் பொறுப்பு!

1961-ஆம் ஆண்டு, கழகத்தின் மூன்றாவது பொது மாநாடு ஜூன் 13-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரை திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணாவை வரவேற்க, மதுரை மாநகரமே திருவிழாக் கோலம் கண்டிருந்தது. அந்த மாநாட்டில்தான், கழகப் பிரச்சாரத்துக்குத் தனது முழுநேரத்தையும் செலவிடுவதற்காக, தொழிற்சங்கச் செயலாளர் பதவியிலிருந்து அண்ணாவின் ஒப்புதலுடன் விலகினார் பேராசிரியர்.

## சீரணி → இளைஞர் அணி

2

**ந.வினோத்குமார்**

தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...

ஓவியம் : ரவி பேலட்



# மக்களிடம் செல்!

*அன்புள்ள தம்பி,*
*மக்களிடம் செல்,*
*அவர்களுடன் வாழ்,*
*அவர்களிடமிருந்து கற்றுக்கொள்,*
*அவர்களை நேசி,*
*அவர்களுக்குச் சேவை செய்,*
*அவர்களுடன் சேர்ந்து திட்டமிடு,*
*அவர்களுக்குத் தெரிந்தவற்றிலிருந்து தொடங்கு,*
*அவர்களிடம் இருப்பதை*
*வைத்துக் கட்டமைப்பு செய்*

நாட்டுக்காக உழைக்க வேண்டும் என்று விரும்பி, நம் கழகத்துக்குள் வரும் ஒவ்வொரு உடன்பிறப்புக்கும் பேரறிஞர் அண்ணா இட்டுச் சென்ற அன்புக் கட்டளைதான் இது. அரசியலுக்கு வருபவர்கள் மட்டுமல்ல... பொதுநலமே உயிர்மூச்சாகக் கொண்டுள்ள ஒவ்வொரு தனிமனிதரும், ஒவ்வொரு இயக்கமும் கற்றுக்கொள்ள வேண்டிய பாலபாடம் இது. பின்பற்ற வேண்டிய குணபாடம் இது.

மக்கள் நலம், மாநில வளர்ச்சி என்பவை யெல்லாம் தனிநபரின் இலக்குகள் அல்ல. அவை ஊர்கூடித் தேர் இழுக்கும் முயற்சி. இந்த முயற்சியில் அரசு மட்டுமே எப்போதும் தனது பங்கைச் செலுத்த வேண்டும் என்று நினைப்பது சரியல்ல. மக்களும் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்க வேண்டும். அப்போதுதான் முன்னேற்றம் கைகூடும்.

எடுத்துக்காட்டாக, ஊரில் டெங்கு ஒழிய வேண்டுமென்றால், அரசு மட்டுமே கொசு மருந்து அடித்து ஊரைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று நினைப்பது தவறு. முதலில், நம் வீட்டையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். வீட்டையும் ஊரையும் சுத்தமாக வைத்திருப்பது என்பது நாட்டை முன்னேற்றுவதன் அடிப்படைப் பணி. இதுபோன்ற அடிப்படைப் பணிகளில் முதலில் இளைஞர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அண்ணாவால் தொடங்கப்பட்டதுதான் ‘சீரணி இயக்கம்’.

1967-இல் சீரணி என்ற தன்னார்வக் குழுவை அண்ணா தொடங்கி வைத்தார். தி.மு.க. தொடங்கப்பட்ட போது, தி.மு.க.வையே தீவிரவாத இயக்கம் என்று சொன்னவர்கள், சீரணியும் ஒரு படையோ என்று சந்தேகம் கிளப்பினர். அதற்குப் பதிலளித்த அண்ணா, “சீரணியின் நோக்கம் உழவும் தொழிலும் வளர உறுதுணையாக நிற்றல், கல்வியறிவும் பொது அறிவும் வளர வகைசெய்தல், துப்புரவுப் பணி மேற்கொள்ளல், தீண்டாமைக் கொடுமைகளை அகற்றுதல், சமூகக்கேடுகளை அன்புவழியில் களைதல், திக்கற்றவர்களுக்குத் துணை புரிதல்! வாலிபர்கள், மாணவர்கள், பெண்கள், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், எந்தக் கட்சியையும் சாராதவர்கள், பல்வேறு வகுப்பினர், வகுப்புகளே வேண்டாம் என்ற முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் அனைவரும் இதில் சேரலாம். ஊதியம், பயன், பணி உயர்வு கோராத ஒருவிதப் படை ஒவ்வொரு நாட்டுக்கும் தேவை. அப்படியான படையே இது” என்றவர், காந்தியைப் போல தூய்மைப் பணியையே போதித்தார். போதித்தது மட்டுமல்ல, தன்னுடைய மனைவி உட்பட கழகத்தினர் பலரும் தங்கள் குடும்பத்தோடு இதில் சேர்ந்தார்கள்.

தலைவனுக்கு அழகு போதிப்பது அல்ல. தான் போதிப்பதைத் தானே பின்பற்றி மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருப்பது. அதன் அடிப்படையில், களப்பணி என்று வந்துவிட்டால், கழகத்தினர் எப்போதும் முன்வரிசையில் நின்றார்கள். அந்தச் சீரான செயல்பாட்டை, சீர்மிகு இளைஞர்களின் பங்களிப்பை, சீரணி வரலாற்றிலிருந்து தொடங்கலாம்.

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி

2

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...”

# மதுவிலக்கும் மது விற்பனையும்!

***தி.மு.க. ஆட்சியின் சாதனை டாஸ்மாக்தான் என்று பா.ஜ.க, நாம் தமிழர் கட்சி போன்ற கட்சிகள் விமர்சனம் செய்கின்றனவே?***

முதன்மை எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வால் தி.மு.க.வை நோக்கி இப்படி விமர்சனம் செய்ய முடியாது. ஏனென்றால், டாஸ்மாக் உருவாவதற்குக் காரணம் அ.தி.மு.க ஆட்சிதான் என்பது அவர்களுக்குத் தெரியும். 1983-ஆம் ஆண்டில் மே 23-ஆம் நாள் டாஸ்மாக் நிறுவனத்தை ஆரம்பித்தவர், அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர்., மதுபான வகைகளை அரசே கொள்முதல் செய்வதற்காக, அதனை ஆரம்பித்தார். கொள்முதல் செய்த மதுபானங்களைத் தனியார் சில்லரை மதுபானக் கடைகள் வாங்கி விற்பனை செய்து வந்தன. 2003-ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் நாள் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா, தனியார் சில்லரை மதுபானக் கடைகளுக்குப் பதில், அரசே டாஸ்மாக் மூலம் குவார்ட்டர், ஆஃப், ஃபுல் பாட்டில்களை விற்பனை செய்யும் என உத்தரவிட்டுச் செயல்படுத்தினார்.

ராஜாஜி, காமராஜர் ஆட்சிக்காலம் முதல் பேரறிஞர் அண்ணா ஆட்சிக்காலம் வரை தமிழ்நாட்டில் மதுவிலக்கு நடைமுறையில் இருந்ததால் மதுக்கடைகள் இல்லை. ஆனால், மதுவே இல்லை என்றோ, தமிழ்நாட்டில் குடிகாரர்களே இல்லை என்றோ சொல்லவே முடியாது. காமராஜர் ஆட்சி உட்பட ஒவ்வொரு ஆட்சியிலும் கள்ளச்சாராய உயிர்ப்பலிகள் ஏற்பட்டன. அண்டை மாநிலங்களான ஆந்திரா, புதுச்சேரியிலிருந்து தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிகளில் மது விற்பனை நடந்து வந்தது. ‘பர்மிட்’ வாங்கி உயர் ரக மதுபானங்களை அருந்தியவர்களும் உண்டு. இந்த நிலையில்தான், 1971-ஆம் ஆண்டில் கலைஞர் மதுவிலக்கை ரத்து செய்ய முடிவெடுத்தார்.



கைலாச விசாரணை கண்துடைப்பு நாடகம்!

**அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா, தனியார் சில்லரை மதுபானக் கடைகளுக்குப் பதில், அரசே டாஸ்மாக் மூலம் குவார்ட்டர், ஆஃப், ஃபுல் பாட்டில்களை விற்பனை செய்யும் என உத்தரவிட்டுச் செயல்படுத்தினார்.**

இந்தியா முழுவதும் மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் அல்லது மதுவிலக்கை அமல்படுத்தும் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்பது கலைஞரின் கோரிக்கை. ஒன்றிய அரசு அதை ஏற்க முன்வரவில்லை. பிற மாநிலங்களில் மதுக்கடைகள் இருப்பதைச் சுட்டிக்காட்டிய கலைஞர், “கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்துக்குள் கொளுத்தப்படாத கற்பூரமாக தமிழ்நாடு எத்தனை நாளைக்குத்தான் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்?” என்று சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

நிதி நிலை கருதி, தவிர்க்க இயலாத சூழலில் மதுவிலக்கை ஒத்திவைப்பதாக அறிவித்தார். மதுக்கடைகள் திறக்கப்பட்டன. அப்போது எம்.ஜி.ஆரும் தி.மு.க.வில்தான் இருந்தார். மதுவின் தீமைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லவேண்டிய அரசின் பிரச்சாரக் குழுவுக்கு அவர்தான் பொறுப்பு வகித்தார். கலைஞரால் ஒத்திவைக்கப்பட்ட மதுவிலக்கு, அவர் ஆட்சிக் காலத்திலேயே 1974- ஆம் ஆண்டில் மீண்டும் நடைமுறைக்கு வந்தது. கள், சாராயம் உள்ளிட்ட மதுக்கடைகள் கலைஞர் ஆட்சியிலேயே மூடப்பட்டன.


1977-ஆம் ஆண்டு முதலமைச்சரான எம்.ஜி.ஆர், ’என் தாய் மீது ஆணையாக மதுவிலக்கை ரத்து செய்ய மாட்டேன்’ என்றார். ஆனால், கூட்டுறவு அங்காடிகளில் ‘பர்மிட்’ முறையில் மது விற்பனைக்கு அனுமதியளித்தார். 21-3-1981 அன்று கள், சாராயக் கடைகளையும் திறந்தார். மது விற்பனைக்காக டாஸ்மாக் நிறுவனத்தைத் தொடங்கினார் என்பதுதான் உண்மை வரலாறு.

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

418

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.